**Press Release No.340** **Dated 22-9-2006**

**GOVERNMENT OF TAMIL NADU**
**DIRECTORATE OF INDIAN MEDICINE AND HOMOEOPATHY**
**CHENNAI-600 106.**

## NOTIFICATION OF COUNSELLING

## FOR INDIAN MEDICINE AND HOMOEOPATHY COLLEGES

All Candidates who have applied for U.G. Courses BSMS/BAMS/BUMS/BNYS/BHMS 2006-07 Session are advised that the Merit list of eligible candidates will be published in the Newspaper on **27.9.2006** and in **website http/www.tnhealth.org on 26.9.2006**. The time of counselling and cut off marks will also be published in newspapers and on our website.

2. However, all candidates who are eligible are requested to attend Counselling on **28.9.2006 at 9.00 A.M.** positively along with original certificates at the **Directorate of Indian Medicine and Homoeopathy, Arignar Anna Government Hospital for Indian Medicine Campus, Arumbakkam, Chennai-600 106**. The Counselling will be extended on **29.9.2006** for eligible candidates whose counselling could not be completed on **28.9.2006**.

3. The Selection Committee shall not be responsible for Postal/Courier delays leading to non-receipt of intimation letter or telegram or for delayed attendance.

4. Candidates are advised to phone this office **(044 - 26190246)** or come in person to verify their eligibility status.

**Director**

---

Issued by The Director of Information and Public Relations, Chennai 9

செய்தி வெளியீடு எண்.340 நாள் 22-9-2006

**தமிழ்நாடு அரசு**

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை,
சென்னை–600 106.

**இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி கல்லூரிகளில் சேருவதற்கான**

**<u>கலந்தாய்வு அறிவிக்கை</u>**

தமிழ்நாடு அரசு மற்றும் சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் 2006–07–ஆம் ஆண்டிற்கான பி.எஸ்.எம்.எஸ்./பி.ஏ.எம்.எஸ்./பி.யு.எம்.எஸ்./பி.எச்.எம்.எஸ். மற்றும் பி.என்.ஒய்.எஸ். பட்டப்படிப்பிற்கு விண்ணப்பம் செய்துள்ள தகுதிவாய்ந்த மாணவர்களின் தகுதி பட்டியல் **(Merit list)** **27.9.2006** அன்றைய நாளிதழ்களிலும் இத்துறைக்கான **website http/www.tnhealth.org-ல் 26.9.2006 அன்றும் வெளியிடப்படும். கலந்தாய்வுக்கான நேரம் மற்றும் கட்-ஆப்** மதிப்பெண்கள் நாளிதழ்களிலும், மேற்காணும் இணையதளத்திலும் வெளியிடப்படும்.

எனினும் தகுதிவாய்ந்த எல்லா மாணவர்களும் அறிஞர் அண்ணா இந்திய மருத்துவ மனை வளாகம், அரும்பாக்கம், சென்னை 600 106 என்ற முகவரியில் **28.9.2006** / **9.00** மணியளவில் நடக்க இருக்கும் ஒற்றை சாளர முறை கலந்தாய்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் இக்கலந்தாய்வில் கலந்து கொள்ள வரும்பொழுது தங்களுடைய கல்வி மற்றும் இதர ஆவணங்களின் அசல் சான்றிதழ்கள் அனைத்தையும் கொணர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். **28/9/2006** அன்று நடைபெறும் கலந்தாய்வில் முடிக்கப்படாத மாணவர்களின் கலந்தாய்வு **29.9.2006**-க்கு நீட்டிக்கப்படும்

இவ்வலுவலகத்தால் தபால் மற்றும் கூரியர் மூலம் அனுப்பப்படும் கடிதம் / தந்தி கிடைக்கப்பெறாததற்கும் மற்றும் மாணவர்களின் காலதாமத வருகைக்கும் தேர்வுக்குழு பொறுப்பேற்க இயலாது.

மாணவர்கள் தங்களுக்கான தகுதி நிலையை தெரிந்து கொள்ள நேரிலோ அல்லது இவ்வலுவலக தொலைபேசி எண். **044–26190246** மூலமாகவோ அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இயக்குநர்**

---

**வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை 9**